செய்தி வெளியீடு எண்.680 நாள்.5.10.2009

# முல்லைப் பெரியாறு பற்றி முதல்வர் கலைஞர் அறிக்கை.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் புதிய அணை கட்டுவது பற்றி நீண்ட நாட்களாக தமிழக அரசுக்கும், கேரள அரசுக்கும் இடையே பிரச்சினை இருந்து வருகிறது. தற்போது இந்தப் பிரச்சினை உச்ச நீதி மன்றத்திலே நிலுவையிலே உள்ளது. அங்கே இன்னும் இறுதித் தீர்ப்பு வழங்கப்படவில்லை. இதற்கிடையே கேரள அரசு புதிய அணை கட்டுவது குறித்து ஓர் ஆய்வினை மேற்கொள்ள மத்திய அரசிடம் அனுமதி கேட்டதாகவும் – அதற்கு சுற்றுப்புற சூழல் அமைச்சகத்திலிருந்து ஒப்புதல் தரப்பட்டு விட்டதாகவும் ஏடுகளிலே செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்ததும், 22–9–2009 அன்று மத்திய அமைச்சர் மாண்புமிகு ஜெய்ராம் ரமேஷ் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் நான் எழுதிய கடிதத்தில் – "முல்லைப் பெரியாறு பகுதியில் புதிய அணை கட்டுவதற்கு கேரள அரசுக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக ஏடுகளிலே செய்தி வந்துள்ளது – தமிழக அரசு இந்தப் பிரச்சினைக்காக உச்ச நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்து, அந்த வழக்கின் மீதான விவாதம் 20–10–2009 அன்று நடைபெறுவதாக உள்ளது. இந்த நிலையில் இந்தப் பிரச்சினை குறித்து கருத்து கூறுவது நீதிமன்றக் கண்டனத்திற்குரியது. (The issue is now subjudice) எனவே கேரள அரசுக்கு எந்தவிதமான அனுமதியும் வழங்குவதற்கு முன்பாக தமிழக அரசின் கருத்தையும் தாங்கள் கேட்க வேண்டுமென்றும் – என்று எழுதியிருந்தேன்.

ஆனால் இன்று தமிழக அரசுக்கு கிடைத்துள்ள செய்தியின்படி, மத்திய வன மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகம், தமிழக அரசிடம் இதுபற்றி எந்த கருத்தையும் கேட்காமலேயே, கேரள அரசுக்கு புதிய அணை கட்டுவதற்கு முன்னோடி ஆய்வு நடத்திட இன்று அனுமதி அளித்து விட்டதாக தெரிகிறது. இந்நிலையில் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் அனுமதிக்கு உடனடி தடை வழங்கக் கோரி வழக்கு பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9